# வளர் தமிழ்

## பயிலல் வளநூல்

# 6




தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

பயிலல் வளநூல்

# வளர்தமிழ் – 6

## புலம்பெயர் தமிழ் மாணவர் கற்கை நூல்

நூலாக்கம்
தமிழர் கல்வி மேம்பாட்டுப்பேரவை

கணினி வடிவமைப்பு
நா. கௌரிசங்கர்

செய்திட்ட நிறைவேற்றுநர்
நகுலேசுவரி அரியரட்ணம்

பதிப்புரிமை
தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

முதற் பதிப்பு 2014

published by
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL - FRANCE

1st Published 2014
Copyright © 2014 TEDC

All rights reserved. No part of this publication may be reproduced,stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise,without prior written permis of the publisher.

Printed in France
2 Allee maurice Audin
93390 Clichy sous bois
France

## உள்நிரல்

**அலகு 1**

மொழிப்பயிற்சி 07
இலக்கணப்பயிற்சி 07
வினாக்கள் 08
மொழிப்பயிற்சி 3 08
முன்னுணர்வு - தமிழர் திருநாள் 09
கருத்தறிதல் - ஒழுக்கம் 10
கட்டுரை 11

**அலகு 2**

மொழிப்பயிற்சி 12
இலக்கணப்பயிற்சி 12
வினாக்கள் 13
முன்னுணர்வு - சங்கிலி மன்னன் 13
கருத்தறிதல் - இலங்கையில் தமிழராட்சி 14
கவிதை 15
பல்தேர்வு வினாக்கள் 16

**அலகு 3**

மொழிப்பயிற்சி 1 18
இலக்கணப்பயிற்சி 18
வினாக்கள் 19
மொழிப்பயிற்சி 2 19
முன்னுணர்வு - என்னூர் 20
கருத்தறிதல் - கீரிமலை 21
கட்டுரை 22

**அலகு 4**

இலக்கணப்பயிற்சி 23
இலக்கணப்பயிற்சி 23
வினாக்கள் 24
முன்னுணர்வு - தாயார் தினம் 24
கருத்தறிதல் - பெற்றோரைப் பேணுவோம் 25
பல்தேர்வு வினாக்கள் 26
கட்டுரை 27

**அலகு 5**

இலக்கணப்பயிற்சி 28
மொழிப்பயிற்சி 1 29
வினாக்கள் 29
முன்னுணர்வு - அன்பான சிறுமி 30
கருத்தறிதல் - நெல்சன் மண்டேலா 31
மொழிப்பயிற்சி 2 32
கவிதை 33

## அலகு 6

| | |
|---|---|
| மொழிப்பயிற்சி | 34 |
| இலக்கணப்பயிற்சி | 34 |
| வினாக்கள் | 35 |
| முன்னுணர்வு - பழங்குடிமக்கள் | 35 |
| கருத்தறிதல் - கடற்றொழில் | 36 |
| பல்தேர்வு வினாக்கள் | 38 |
| கட்டுரை | 39 |

## அலகு 7

| | |
|---|---|
| இலக்கணப்பயிற்சி | 40 |
| மொழிப்பயிற்சி | 41 |
| வினாக்கள் | 41 |
| முன்னுணர்வு - யாழ் நூலகம் | 42 |
| கருத்தறிதல் - அன்னை தெரேசா | 43 |
| இலக்கணப்பயிற்சி | 44 |
| கவிதை | 45 |

## அலகு 8

| | |
|---|---|
| மொழிப்பயிற்சி | 46 |
| இலக்கணப்பயிற்சி | 46 |
| வினாக்கள் | 47 |
| முன்னுணர்வு - மண்ணுரிமை | 47 |
| கருத்தறிதல் - யாழ்ப்பாணம் | 48 |
| பல்தேர்வு வினாக்கள் | 50 |
| கட்டுரை | 51 |

## அலகு 9

| | |
|---|---|
| மொழிப்பயிற்சி 1 | 52 |
| இலக்கணப்பயிற்சி | 53 |
| வினாக்கள் | 53 |
| முன்னுணர்வு - விடுதலையுணர்வு | 53 |
| கருத்தறிதல் - தமிழே உயிரே பாடல் | 54 |
| இலக்கணப்பயிற்சி | 57 |
| கட்டுரை | 57 |

## அலகு 10

| | |
|---|---|
| மொழிப்பயிற்சி | 58 |
| இலக்கணப்பயிற்சி | 59 |
| வினாக்கள் | 59 |
| முன்னுணர்வு - மாலைக்காட்சி | 60 |
| கருத்தறிதல் - நட்பு | 60 |
| பல்தேர்வு வினாக்கள் | 62 |
| கவிதை | 63 |

## அலகு 11


| | |
|---|---|
| மொழிப்பயிற்சி 1 | 64 |
| இலக்கணப்பயிற்சி | 65 |
| வினாக்கள் | 65 |
| முன்னுணர்வு - கால்டுவெல் | 66 |
| கருத்தறிதல் - முயற்சி | 67 |
| மொழிப்பயிற்சி 2 | 68 |
| அஞ்சல் | 68 |


## அலகு 12


| | |
|---|---|
| மொழிப்பயிற்சி 1 | 69 |
| இலக்கணப்பயிற்சி | 70 |
| வினாக்கள் | 70 |
| முன்னுணர்வு - சூழல் மாசடைதல் | 71 |
| கருத்தறிதல் - எடிசன் | 72 |

# அலகு 1

**1) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்வோம்.**

1. பழங்கால மக்கள் காடுகளில் ______________________ .

2. உள்ளத்தில் இருந்து வெளிப்படும் இயல்புகளைப் பண்பாடு எனக் ______________________ .

3. எறும்புகள் சாரிசாரியாக ஊர்ந்து ______________________ .

4. நாங்கள் உயிர்களிடத்தில் அன்பாய் ______________________ .

5. பள்ளி ஆண்டுவிழாவில் சேரனால் நாடகம் ______________________ .

**2) கீறிட்ட இடத்தில் பொருத்தமாக எழுதுவோம்.**

1. மெய்யெழுத்துகள் ______________________ வகைப்படும்.

2. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன ______________________ .

3. ய், ர், ல், வ், ழ், ள் என்பன ______________________ எழுத்துகள்.

4. உயிரும் மெய்யும் சேர்ந்து பிறக்கும் எழுத்துகள் ______________________ .

5. அ, இ, உ, எ, ஒ என்பன ______________________ எழுத்துகள்.

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. சுட்டாலும் வெண்மை தருவது எது?

_______________________________________________

2. வறுமையால் துன்புற்ற போதிலும் பெருந்தகைமையோடு இருப்பவர் யார்?

_______________________________________________

3. **பழமொழி :** குப்பையில் கிடந்தாலும் மங்காதது எது?

_______________________________________________

**4) பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. பண்பாடு :-

_______________________________________________

_______________________________________________

2. வள்ளல் :-

_______________________________________________

_______________________________________________

3. மன்னன் :-

_______________________________________________

_______________________________________________

4. மானம் :-

_______________________________________________

_______________________________________________

**5) கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதிப் பந்தியை நிறைவு செய்வோம்.**

## தமிழர் திருநாள்

| | | |
|---|---|---|
| கூலங்கள் | இரண்டாம் | முக்கனிகளும் |
| பொங்கலை | நீரையும் | கதிரவனுக்கு |

தைப்பொங்கல் தமிழர் திருநாள். உலகிற்குத் தேவையான ஒளியையும் ____________________ வெப்பத்தையும் தரும் கதிரவனுக்கு நன்றி கூறும் நாள். கதிரவனின் கொடையாலே இவ்வுலகில் நாம் அனைத்தையும் பெறுகின்றோம். கனிகள் கனிந்து ____________________ விளைந்து ஆனைந்து பெருகி வளங்கொழிப்பது தைத்திங்கள். எனவே தைத்திங்களின் முதல் நாளை ____________________ நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடினர் தமிழர். இந்நாளே தமிழரின் புத்தாண்டு நாளுமாகும். இந்நாளில் பொங்கல் பொங்கி; ____________________ சேர்த்துக் கதிரவனுக்குப் படைப்பர். பின்னர் உறவினரோடும் அயலவரோடும் சேர்ந்து ____________________ உண்டு மகிழ்வர். இந்நாளில் தமிழர்களின் தலையாய பண்பாடுகளான விருந்தோம்பலும் நன்றி கூறுதலும் மேலோங்கி நிற்கின்றன. தை ____________________ நாள் மாட்டுப்பொங்கலைக் கொண்டாடுவர்.

**6) பந்தியை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## ஒழுக்கம்

தமிழர் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் போற்றுகின்றனர். ஒழுக்கம் என்பது சிறந்த பண்புகளைக் கடைப்பிடித்தல் ஆகும். உண்மை பேசுதல், பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், பெரியோரை மதித்தல், பிறருக்கு உதவுதல் போன்றவை சிறந்த பண்புகளாகும். ஒழுக்கம் உடையவர்களையே எல்லோரும் விரும்புவர். ஒழுக்கம் இல்லாதவர்களை குமுகாயமே வெறுத்து ஒதுக்கும். அவர்களால் குமுகாயத்துக்குத் தீமையே விளையும். மாணவர்களுக்கு நல்லொழுக்கங்கள் பள்ளிகளிலே கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் பெற்றோர்களும் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொடுக்கின்றனர். ஆசிரியரினதும் பெற்றோரினதும் அறிவுரைகளைக் கேட்டு நடக்கும் பிள்ளைகளே குமுகாயத்தில் சிறந்தவர்களாக மதிக்கப்படுகின்றனர். அவர்களால் வீட்டுக்கும் நாட்டுக்கும் நன்மையே விளைகின்றது. ஆசிரியரையும் பெற்றோரையும் மதிக்காத பிள்ளைகள் ஒழுக்கம் அற்றவர்களாகவும் தீய பழக்கவழக்கங்களையும் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். இவர்களைக் குமுகாயம் வெறுத்து ஒதுக்கும். அத்துடன் தங்களது வாழ்வையே தொலைத்தவர்களாக நடுவீதியில் நிற்கும் நிலைக்கு ஆளாகின்றனர். எனவே நாம் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிப்போம். உலகம் போற்றும் உயர்ந்தவர்களாக வாழ்வோம்.

1. தமிழர் உயிரினும் மேலாக எதைப் போற்றுகின்றனர்?

______________________________

______________________________

2. சிறந்த பண்புகள் இரண்டு தருக?

______________________________

______________________________

3. யாரை எல்லோரும் விரும்புவர்?

______________________________

______________________________

4. நாம் யாருடைய அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்?

---

---

5. குமுகாயம் யாரை வெறுத்து ஒதுக்கும்?

---

---

**7) 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுவோம்.**

- கோடைகாலம்

# அலகு 2

## 1) சொல்லியங்களைப் பொருத்தமாக நிறைவு செய்வோம்.

னகர ணகர ஒலி வேறுபாடு

1. மன்னார் உலக __________ த் துறையாக விளங்கியது.
(வனிக, வணிக)

2. தம்பி __________ ப் பாவை செய்து விளையாடினான்.
(பனி, பணி)

3. இன்னிசை விழாவில் வேணி __________ மீட்டினாள்.
(வீணை, வீனை)

4. விளையாட்டுத் திடலில் வீரர்கள் __________ வகுத்து நின்றனர்.
(அணி, அனி)

5. குழலி சூடிய மல்லிகைப் பூவில் இருந்து இனிய __________ வீசியது.
(மனம், மணம்)

## 2) பின்வரும் சொற்களின் திணை, பால், என்பவற்றைத் தருக.

| | திணை | பால் |
|---|---|---|
| பாவலன் | ________ | ________ |
| வெளவால் | ________ | ________ |
| மரங்கள் | ________ | ________ |
| குளம் | ________ | ________ |
| அம்மா | ________ | ________ |

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1) **பழமொழி :** அரசன் இல்லாத நாடு எதைப் போன்றது?

____________________________________________

____________________________________________

2) உலகத்து உயிர்கள் எல்லாம் எதை நோக்கி வாழ்கின்றன?

____________________________________________

____________________________________________

3) மன்னனின் செங்கோலை நோக்கி வாழ்பவர் யார்?

____________________________________________

____________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

**சங்கிலி மன்னன்**

| | | |
|---|---|---|
| சிறைப் | இரண்டகனின் | பாசறையில் |
| காக்கைவன்னியன் | வெற்றி | மாற்றார் |

யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னன் சங்கிலியன். இவன் சிறந்த மாவீரன். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்குப் பலமுறை முயன்றனர். ஆனால் சங்கிலியனை ____________________ கொள்ள முடியவில்லை. எனவே போர்த்துக்கேயர் காக்கைவன்னியன் என்ற இரண்டகனை உதவிக்கு நாடினர். சங்கிலியன் மீது பொறாமை கொண்டிருந்த ____________________ சங்கிலியனை அடுத்துக் கெடுக்க உடன்பட்டான். ஒருமுறை யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயருக்கும் தமிழர் படைகளுக்கும் பெருஞ்சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. போர்த்துக்கேயர் தோற்றோடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சங்கிலியன்

____________________ இறைவழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தான். அந்நேரம் அவனிடம் வாள் இருக்கவில்லை. அதை அறிந்த காக்கைவன்னியன் நட்பு நாடிவந்ததுபோல் நடித்தான். சங்கிலியன் அந்த ____________________ நடிப்பை நம்பி ஏமாந்திருந்த வேளையில், திடீரென்று மறைந்திருந்த வன்னியனது ஆட்கள் சங்கிலியனைச் ____________________ பிடித்தனர். இரவோடிரவாகக் கோவா நாட்டிற்குக் கொண்டு சென்றனர். அங்கே சங்கிலியன் தலைவெட்டிக் கொல்லப்பட்டான். அன்றுதொட்டு இன்றுவரை யாழ்ப்பாணம் ____________________ ஆட்சியில் அல்லற்படுகிறது.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### இலங்கையில் தமிழராட்சி

சிங்கள இனம் தோன்றுவதற்குக் காரணமானவன் என்று சொல்லப்படுபவன் விசயன். இவன் கலிங்க நாட்டவன். இவன் இலங்கைக்கு வருவதற்கு முன் சித்தார்த்தர் என்ற இயற்பெயருடைய புத்தர் இலங்கைக்குச் சில தடவைகள் வந்தார். இவர் வந்தது கி.மு 500 ஆம் ஆண்டளவில். இந்நாளில் தென்னிலங்கையில் இயக்கர்களின் ஆட்சி நடந்தது. வடவிலங்கையில் நாகர்களின் ஆட்சி நடந்தது. இவ்விரு இனத்தவரும் தமிழர். எனவே புத்தர் காலத்தில் முழு இலங்கையும் தமிழர் ஆட்சியில் இருந்தது தெரிகிறது. இயக்கரது அரசு கல்யாணியிலும் நாகரது அரசு நாகதீபத்திலும் இருந்தன. கல்யாணி இன்றைய கொழும்பு ஆகும். இயக்கர் நாகரிடையே ஏற்பட்ட அரசியல் குழப்பங்களைத் தீர்ப்பதற்காகவே புத்தர் இலங்கை வந்தார். அவர் மூன்றாந்தடவை வந்தபோது நாகதீபத்திற்கும் வந்தார். அவரது வருகையின் அடையாளமாகப் பின்னாளில் மணிபல்லவத்தில் புத்த மடாலயம் ஒன்று கட்டப்பட்டது. மணிபல்லவம் இன்று நயினாதீவு என்று அழைக்கப்படுகிறது.

1. இன்றைய கொழும்பின் பண்டைய பெயர் என்ன?

______________________________

2. மணிபல்லவம் இன்று எவ்வாறு அழைக்கப்படுகிறது?

______________________________

3. புத்தரின் வருகையின் போது இலங்கைமுழுவதையும் ஆண்ட இனம் எது?

______________________________

4. சிங்கள இனம் தோன்றுவதற்குக் காரணமானவன் யாரென்று கூறப்படுகிறது?

______________________________

5. சித்தார்த்தர் என்பவர் யார்?

______________________________

## 6) பொருத்தமான சொல்லை எழுதி கவிதையை ஆக்குவோம்.

| | | | |
|---|---|---|---|
| நிறைந்தவள் | உணவைக் | காப்பதும் | சொல்பவள் |

### எம் தாயே

பெற்று வளர்ப்பவள் எம் தாயே
பேணிக் ______________ எம் தாயே
அன்பு மிகுந்தவள் எம் தாயே
அறிவுரை ______________ எம் தாயே
விரும்பும் ______________ தந்திடுவாள்
வேண்டும் யாவும் செய்திடுவாள்.
கனிவு ______________ எம் தாயே
கண்மணி போல் எம்மைக் காத்திடுவாள்.

## 7) பொருத்தமான விடைகளைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுவோம்.

1) பின்வருவனவற்றுள் உயர்திணை

அ) வீடு ஆ) கடல் இ) குதிரை ஈ) முதியவர்

2) வறுமை காரணமாக தன்னைத் தேடிவந்த புலவருக்குத் தன் தலையைக் கொடுக்க முன்வந்த மன்னன்

அ) இரும்பொறை ஆ) குமணன்

இ) எல்லாளன் ஈ) கரிகாலன்

3) தைப்பொங்கல் அன்று மேலோங்கி நிற்கும் தமிழர் பண்பு

அ) விருந்தோம்பல் ஆ) ஒற்றுமை

இ) வீரம் ஈ) மானம்

4) நாங்கள் எப்போதும் ____________________ உள்ளவர்களாக வாழ்வோம்.

அ) செல்வம் ஆ) கல்வி

இ) ஒழுக்கம் ஈ) வீடு

5) மக்களின் புறத்தோற்ற வளர்ச்சியினை எவ்வாறு அழைப்பர்

அ) பண்பாடு ஆ) உயர்வு இ) ஒழுக்கம் ஈ) நாகரிகம்

6) எல்லாள மன்னன் வெற்றி கொண்டது.

அ) அசேலனை ஆ) குத்திகனை

இ) துட்டகெமுனுவை ஈ) தேவநம்பியதீசனை

7) ங், ஞ், ண், ந், ம், ன் என்பன

அ) மெல்லின மெய்கள் ஆ) வல்லின மெய்கள்

இ) இடையின மெய்கள் ஈ) உயிரினம்

8) பெலிவாவியைக் கட்டிய தமிழ் மன்னன் யார்?

அ) சேனன் ஆ) குத்திகன்

இ) எல்லாளன் ஈ) சங்கிலியன்

9) போர் வீரர் தங்கியிருந்து போர் செய்யும் இடம்

அ) கோட்டை ஆ) பாசறை

இ) அரண்மனை ஈ) அந்தப்புரம்

10) இயக்கரது ஆட்சி இருந்த இடம்

அ) கல்யாணி ஆ) மணிபல்லவம்

இ) நயினாதீவு ஈ) நாகதீபம்

# அலகு 3

**1) பொருத்தமான சொற்களை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்வோம்.**

1. எல்லாளனது சிலை அநுராதபுரத்தில் ______________ .
2. விதவிதமான விலங்குகளைப் பார்த்து நானும் தம்பியும் ______________ .
3. பிறருக்குக் கொடுத்துப் புகழ் பெற்று வாழ்வது தமிழர் ______________ .
4. கன்னியாவில் வெந்நீர் கிணறுகள் ______________ .
5. சங்கு சுட்டாலும் வெண்மை ______________ .

**2) கீழ்வரும் சொற்களைப் பொருத்தமாக நிரற்கூட்டில் எழுதுவோம்.**

வந்தேன், பறக்கின்றன, வருகிறான், ஓடியது, படி, விளையாடுவோம், படிப்போம், வாருங்கள், பார்ப்பீர்கள், அவன், வருவான், நடிப்பேன், தருவோம், கூறுங்கள், வந்தாய்

| தன்மை | முன்னிலை | படர்க்கை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1) ஒருவன் செல்வம் பெற்றதனால் பெற்ற பயன் எது என வள்ளுவர் கூறுகின்றார்?

______________________________

______________________________

2) சுற்றம் என்ற சொல்லின் பொருள் யாது?

______________________________

______________________________

3) **பழமொழி :**

**நீர் அடித்து ______________ விலகாது.**

**4) பின்வரும் ஒருமைச் சொல்லியங்களைப் பன்மைச் சொல்லியங்களாகவும் பன்மைச் சொல்லியங்களை ஒருமைச் சொல்லியங்களாகவும் மாற்றி எழுதுக.**

1. ஆடு புல் மேய்ந்தது.

______________________________

______________________________

2. அவன் கிளித்தட்டு விளையாடினான்.

______________________________

______________________________

3. பறவைகள் வானத்தில் பறக்கின்றன.

______________________________

______________________________

4. நண்பர்கள் கடலில் நீந்தி விளையாடுகின்றனர்.

______________________________

______________________________

5. பெண் தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து எடுக்கின்றாள்.

________________________________________

________________________________________

**5) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

**என்னூர்**

| | | |
|---|---|---|
| சுட்டுவிரலை | வைகறையில் | பெருமளவு |
| காட்சிகளின் | வண்ணத்தில் | சோலையாய் |

ஆகா! என்னே அழகு தவழ்ந்து விளையாடும் ஊர். ________________ எழுந்து மெல்லிய குளிரிளங் காற்றில் தோட்டவெளி நோக்கி நடந்து செல்கிறேன். எங்கள் மண்ணின் பெருமைதான் பெருமை. உழைப்பாளிக்கு அள்ளிக் கூலி கொடுப்பதற்காக ________________ விளைச்சலைத்தரும் மண். தோட்டவெளியில் நடை வரம்பில் ஒவ்வொரு தோட்டத்தையும் பார்த்தவாறு செல்கிறேன். பார்க்கும் இடமெங்கும் பசுமை பரவிக்கிடக்கிறது. கத்தரிச்செடிகள் நாவற்பழ ________________ காய்த்துக் குலுங்குகின்றன. வெண்டைச்செடிகள் கவனம் என்று ________________ நீட்டி எச்சரிப்பதுபோல் காய்த்திருக்கின்றன. கரும்பச்சையாய்த் தெரிவது மிளகாய்ச் செடிகள். அதோ மெல்லிய பச்சைநிறத்தில் வரிசைவரிசையாக வளர்ந்திருப்பவை உருளைக் கிழங்குப் பயிர்கள். கண்கொள்ளாக் ________________ இருப்பிடமாய், இன்பச் ________________ விளங்கியது என் சிற்றூர்.

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழு விடை எழுதுவோம்.**

### கீரிமலை

கடற்குளிப்புக்காக மக்கள் நாடி வருகின்ற இடங்களில் ஒன்று கீரிமலை. இது ஒரு கடலோரச் சிற்றூராகும். வட தமிழீழத்தின் கிழக்குக் கடல் இந்து மாவாரியாகும். அலையெறிந்து ஆர்ப்பரிக்கும் ஆழமான கடல். ஆனால் கீரிமலைப் பகுதியில் கரையிலிருந்து 300-400 மீற்றர் தூரம்வரை கரையோரம் எங்கும் நிலத்தடிப் பாறைப் படிவு இருக்கிறது. அதனால் மண்ணரிப்பு ஏற்படாமல் கடல் ஆழங்குறைந்து காணப்படுகிறது. எனவே இங்கே கடலாடுவதற்காகக் கிழமையிறுதி நாட்களில் பெருந்திரளாக மக்கள் கூடுவார்கள். கடலில் இறங்கிக் குளிக்க அஞ்சுபவர்களுக்காகக் கரையில் ஒரு கேணி கட்டியுள்ளனர். அக்கேணிக்கு கடல் நீர் வருவதற்காக ஒரு கட்டுக் கால்வாய் இருக்கிறது. இந்தக் கேணியிலும் கடலாடலாம்: இது தவிர, மிகப் பண்டைக் காலத்துச் சிவன் கோவிலான தம்பலேசுவரம் (நகுலேசுவரம்) கோவில் இங்கே கடற்கரையில் உள்ளது. கீரிமலையில் சமயத்துடன் தொர்புடைய நன்னீர் நிலையொன்றும் உள்ளது. அதில் குளித்தால் மேனி நோய்கள் தீரும் என்று பழங்காலந் தொட்டு நம்புகின்றனர். எனவே கடலாடல், இறைவழிபாடு ஆகிய கரணியங்களால் கீரிமலை சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

கடலாடல் - கடலில் நீராடுதல்

1. கடற்குளிப்புக்காக மக்கள் நாடி வருகின்ற கடலோரச் சிற்றூர் எது?

________________________________________

________________________________________

2. கீரிமலையில் உள்ள பண்டைய சிவன்கோவிலின் பெயரென்ன?

________________________________________

________________________________________

3. எதற்காகக் கேணி ஒன்று கட்டியுள்ளனர்?

________________________________________

________________________________________

4. கீரிமலையில் உள்ள நன்னீர் நிலையின் சிறப்பு என்ன?

________________________________________

________________________________________

5. எக்கரணியங்களால் கீரிமலை சுற்றுலாத்தலமாக விளங்குகிறது?

________________________________________

________________________________________

## 7) 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுவோம்.

✦ நீர் சென்ற சுற்றுலா

# அலகு 4

**1) பின்வரும் சொல்லியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை எழுதுவோம்.**

1. நாங்கள் பெரியோரை மதிக்க வேண்டும்.
2. மாலை வேளையில் பறவைகள் கூட்டைத் தேடிப் பறக்கும்.
3. சிவப்பிரகாசசுவாமிகள் நன்னெறி என்ற நூலை எழுதினார்.
4. இலக்கியா காலையும் மாலையும் உடற்பயிற்சி செய்வாள்.
5. இன்கலைகள் என்றும் மகிழ்ச்சியைத் தரும்.

| எழுவாய் | பயனிலை | செயப்படுபொருள் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**2) கீழே உள்ள சொற்களுடன் 'ஐ' சேர்த்து எழுதுவோம்.**

எ - கா: நான் + ஐ = ______________________

1. நாங்கள் + ஐ = ______________________
2. நீ + ஐ = ______________________
3. நீங்கள் + ஐ = ______________________
4. அவன் + ஐ = ______________________
5. அவள் + ஐ = ______________________
6. அவர்கள் + ஐ = ______________________
7. அது + ஐ = ______________________

8. அவை + ஐ = ______________________

9. இது + ஐ = ______________________

10. இவை + ஐ = ______________________

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :**

யாருடைய வார்த்தை அமிழ்தம் என்று கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

2. இடும்பை என்ற சொல்லின் கருத்து யாது?

______________________________________________

______________________________________________

3. பெரியோரது சொல்லைக் கேட்காவிட்டால் என்ன நேரிடும் என வள்ளுவர் கூறுகின்றார்?

______________________________________________

______________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| மலர்களின் | பிள்ளைகள் | பல்துலக்கி |
| அவர்கள் | கட்டியணைத்து | படித்து |

## தாயர் தினம்

இன்று தாயர் நாள். அம்மா தன் அன்றாடக் கடமைகளைச் செய்வதற்காக அதிகாலையிலே எழுந்தார். ______________________, முகம் கழுவி, தன் கடமைகளைத் தொடங்கினார். அப்போது ______________________ கனியும் வேழனும் அங்கே வந்தனர். அவர்களுடைய கைகளிலே ______________________ கட்டும் ஒரு பொதியும் இருந்தன. இருவரும்

புன்சிரிப்புடன் அம்மா இந்தாருங்கள் உங்களுக்கு எங்களுடைய பரிசு என்று அவற்றை நீட்டினர். அம்மா திகைத்து நின்றார். அம்மா இன்றைக்குத் தாயர் நாள். உலகெங்குமுள்ள பிள்ளைகள் தங்கள் தாய்மாரைப் போற்றுகின்ற நாள். அதுதான் நாங்கள் எங்கள் அம்மாவுக்கு வாழ்த்தைச் சொல்லிப் பரிசு தருகின்றோம் என்றனர். அம்மா மகிழ்ந்து, தன் பிள்ளைகள் இருவரையும் ________________________ முத்தமிட்டார். நீங்கள் பூவும் பரிசும் தந்தால் போதாது, அம்மாவுக்கு இதைவிடப் பெரிய பரிசு தர வேண்டும் என்றார். ________________________, என்ன பரிசம்மா வேண்டும்? என்று ஒரே குரலில் கேட்டனர். நீங்கள் நல்லபிள்ளைகளாய் வாழ்ந்து நன்றாகப் ________________________ வாழ்வில் முன்னேறவேண்டும். பெரியோர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு நடத்தல் வேண்டும். அது தான் பிள்ளைகள் அம்மாவுக்குத் தரும் நற்பரிசு என்றார். பிள்ளைகள் மகிழ்வுடன், நாங்கள் அதை அம்மாவுக்குத் தருவோம் என்று கூறியபடி துள்ளி ஓடினர்.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## பெற்றோரைப் பேணுவோம்

எம்மைப் பெற்று பேணி வளர்க்கும் எம் தாய், தந்தையரை நாம் என்றும் மறக்கக்கூடாது. எங்கள் நலன்களுக்காகவே எப்போதும் நல்லதைச் சொல்வார்கள். எனவே நாம் அவர்கள் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டு நடக்க வேண்டும். தாயிற் சிறந்த ஒரு கோவிலும் இல்லை தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்பது கற்றுணர்ந்த சன்றோர்கள் எமக்கு வழங்கியிருக்கும் பொன்மொழிகளாகும். இவை தாய் தந்தையரின் அருமை பெருமைகளை விளக்கிக் கூறுகின்றன. இத்தகைய அன்பான பெற்றோர்களை அவர்களின் முதுமைக் காலத்தில் வைத்துப் பாதுகாப்பது பிள்ளைகளின் தலையாய கடமையாகும். எங்களின் பெற்றோரைப் பேணிக் காக்கும் பொறுப்பை நாங்கள் பெரும் பேறாகக் கருத வேண்டும். பெற்றோரின் வாழ்த்துதல்களே எங்களை நன்றாக வாழ வைக்கும்.

1. நாம் யாரை மறக்கக் கூடாது?

______________________________________

______________________________________

2. எங்கள் நலன்களுக்காகப் பெற்றோர்கள் எதைச் சொல்வார்கள்?

______________________________________

______________________________________

3. இங்கு வந்துள்ள பொன்மொழி ஒன்றைத் தருக?

______________________________________

______________________________________

4. பிள்ளைகளின் தலையாய கடமை எது?

______________________________________

______________________________________

5. நாம் எதைப் பெரும் பேறாகக் கருத வேண்டும்?

______________________________________

______________________________________

**6) பொருத்தமான விடைகளைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுவோம்.**

1) சங்கிலியன் சிலை அமைந்துள்ளது

அ) யாழ்ப்பாணத்தில் ஆ) மட்டக்களப்பில்

இ) மன்னாரில் ஈ) திருகோணமலையில்

2. நான், நாம், நாங்கள் என்பன

அ) ஒருமை ஆ) முன்னிலை இ) தன்மை ஈ) படர்க்கை

3. ஆமையுடன் குளத்தில் வாழ்ந்து வந்தவை

அ) காகங்கள் ஆ) அன்னங்கள்

இ) வாத்துகள் ஈ) கொக்குகள்

4. இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்

அ) வவுனியா ஆ) மன்னார்

இ) திருகோணமலை ஈ) மட்டக்களப்பு

5. கீரிமலையில் அமைந்துள்ள ஈச்சுரம்

அ) முன்னீச்சுரம் ஆ) தம்பலேச்சுரம்,

இ) திருக்கோணேச்சுரம் ஈ) திருக்கேதீச்சுரம்

6. படர்க்கை இடத்தைக் குறிக்கும் சொல்

அ) வந்தோம் ஆ) பாடுகின்றோம்

இ) வரைகின்றாய் ஈ) எழுதுகின்றான்

7. காகித ஆலை அமைந்துள்ள இடம்

அ) திருகோணமலை ஆ) வாழைச்சேனை

இ) யாழ்ப்பாணம் ஈ) முறிகண்டி

8. பின்வருவனவற்றில் பொதுநிலையம் அல்லாதது

அ) வீடு ஆ) நூல்நிலையம் இ) பள்ளி ஈ) மருத்துவமனை

9. ஒருமை, பன்மை என்பன

அ) இடம் ஆ) பால் இ) எண் ஈ) திணை

10. பின்வருவன வற்றில் முன்னிலை இடத்தைக் குறிப்பது.

அ) அவர் ஆ) நாங்கள் இ) நான் ஈ) நீர்

**7) 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுவோம்.**

✦ பிறருக்கு உதவுவோம்

# அலகு 5

**1) அறுவகைப் பெயர்களையும் பொருத்தமாக எழுதுவோம்.**

இரவு, கோவில், சிவப்பு, கண், பந்து ஆடுதல், சினம், தமிழீழம், நடத்தல், நாய், வேர், சமைத்தல், கடற்கரை, வட்டம், பூ, புதன், பொரித்தல், கிளி, தாய்லாந்து, கோடை, இலை, விளையாட்டுத்திடல், அன்பு, சிறுவன், கால், விளையாடுதல், இனிப்பு, மரம், மாசி, ஆண்டு

| பொருட்பெயர் | இடப்பெயர் | காலப்பெயர் |
| --- | --- | --- |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |

| சினப்பெயர் | குணப்பெயர் | தொழிற்பெயர் |
| --- | --- | --- |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |

**2) பின்வரும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுவோம்.**

நாகரிகம் :-

________________________________________

________________________________________

உறவினர் :-

________________________________________

________________________________________

குளம் :-

________________________________________

________________________________________

விழுப்புண் :-

________________________________________

________________________________________

குடியுரிமை:-

________________________________________

________________________________________

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி:** மயிலே மயிலே என்றால் ________________ போடாது.
2. பூவாதே காய்க்கும் எனத் தொடங்கும் பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

   ________________________________________
3. எவ்வளவு தான் தெளிவாக எடுத்துரைத்தாலும் விளங்கிக் கொள்ளாதோர் யார்?

   ________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| நன்றியைத் | சட்டையின் | நாயையும் |
| கல்லால் | மனம் | வலி |

## அன்பான சிறுமி

சிறுவன் ஒருவன் நாளும் மாடு மேய்க்கச் செல்வான். செல்லும்போது தான் அன்புடன் வளர்க்கும் ____________ கூட்டிச்செல்வான். இதை சிறுமி ஒருத்தி நாளும் பார்த்து மகிழ்வாள். ஒரு நாள் சிறுவன் மட்டுமே தனியாகச் சென்றான். சிறுமி ஓடி வந்து எங்கே உனது நாயைக் காணவில்லை என்று கேட்டாள். உடனே சிறுவன் கவலையுடன் என் நாயை யாரோ ____________ அடித்துவிட்டார்கள். அதன் காலில் காயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் நடக்கமுடியவில்லை என்றான். அவனது வீட்டை நோக்கி ஓடினாள். நாய் வலியுடன் படுத்திருப்பதைக் கண்டாள். அதைப் பார்த்து ____________ வருந்தினாள். அதன் காலை வருடினாள். வெந்நீரால் ஒத்தடம் கொடுத்தால் நாயின் கால் ____________ போய்விடுமென எண்ணினாள். சுற்றும்முற்றும் பார்த்தாள் ஒரு துணியையும் காணவில்லை. உடனே தான் அணிந்திருந்த ____________ ஒரு பகுதியைத் தயக்கமின்றிக் கிழித்தாள். வெந்நீரில் துணியைத் தோய்த்து நாயின் காலிற்கு மெல்லமெல்ல ஒத்தடம் கொடுத்தாள். நாயின் கால் வலி குறைந்தது. அது வாலை ஆட்டித் தன் ____________ தெரிவித்தது. அதைப் பார்த்து இருவரும் மகிழ்ந்தனர். போரில் காயப்பட்டவர்களுக்கு கையில் ஒரு விளக்குடன் சென்று பணி புரிந்ததனால் 'விளக்கேந்தியபெருமாட்டி' என்ற சிறப்புப் பெயரைப்பெற்ற புளோரன்சு நைட்டிங்கேல் என்பவரே அச்சிறுமி ஆவாள்.

## 5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.

### நெல்சன் மண்டேலா

நெல்சன் மண்டேலா 1918 ஆம் ஆண்டு யூலை மாதம் 18ஆம் திகதி தென் ஆபிரிக்காவிலுள்ள குலு என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் சிறுவயதில் குத்துச் சண்டை வீரராக விளங்கினார். பள்ளியில் படிக்கும் பொழுதே போர்க்கலைகளையும் கற்றுக்கொண்டார். இவர் தனது பட்டப்படிப்பை இலண்டன், தென்னாபிரிக்கா பல்கலைக்கழகங்களில் மேற்கொண்டார். அதே நேரத்தில் பகுதிநேரக் கல்வியாகச் சட்டக் கல்வியையும் கற்றார். பின்பு தங்கச் சுரங்கப்பாதுகாப்பு அதிகாரியாகப் பணியாற்றினார்.

தென்னாபிரிக்காவில் கறுப்பினமக்கள் வெள்ளையர்களால் அடக்கி ஒதுக்கப்பட்ட பொழுது அறவழியில் போராடத் தொடங்கினார். இதனால் இவர் பல தடவைகள் சிறையில் அடைக்கப்பட்டார். அறவழிப் போராட்டம் வெள்ளையர்களால் நசுக்கப்பட்டு பல கறுப்பின மக்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து அறவழி மூலம் உரிமைகளைப் பெற முடியாது என உணர்ந்த மண்டேலா ஆயுத வழிப் போராட்டத்தை நாடினார். 1961 ஆம் ஆண்டு ஆபிரிக்கத் தேசியத்தின் ஆயுதப்படை தலைவராக மண்டேலா உருவெடுத்தார். தம் உரிமைகளுக்காகப் போராடிய இவரின் மீது அமெரிக்கா பயங்கரவாதி என்ற முத்திரையைக் குத்தியது. 5.8.1962 அன்று கைது செய்யப்பட்டார். மண்டேலா 1994ல் கறுப்பு இனத்தின் முதலாவது அதிபராக மண்டேலா தெரிவு செய்யப்பட்டார். நோபல் பரிசு பெற்ற நெல்சன் மண்டேலா தனது 95வது அகவையில் உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் 5.12.2013ல் காலமானார். தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலாவின் பிறந்தநாளான யூலை 18ஆம் நாளை சர்வதேச நெல்சன் மண்டேலா நாளாக ஐ.நா அறிவித்துள்ளது.

1. நெல்சன் மண்டேலா எங்கே எப்பொழுது பிறந்தார்?

________________________________________

________________________________________

2. இவர் தனது பட்டக்கல்வியை எங்கெங்கு கற்றார்?

______________________________

______________________________

3. நெல்சன் மண்டேலா எதற்காகப் போராடத் தொடங்கினார்?

______________________________

______________________________

4. கறுப்பு இனத்தின் முதலாவது அதிபர் யார்?

______________________________

______________________________

5. நெல்சன் மண்டேலா நாளாக எந்நாளை ஐ.நா அறிவித்துள்ளது?

______________________________

______________________________

6) ஒரே பொருள் தரும் இரண்டு சொற்களைக் கண்டறிந்து எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| ஞாயிறு | உவகை | உலகம் |
| வானம் | கொடையாளி | ஏழ்மை |
| வையகம் | கதிரவன் | வள்ளல் |
| மகிழ்ச்சி | வறுமை | விண் |

1. ______________ ______________
2. ______________ ______________
3. ______________ ______________
4. ______________ ______________
5. ______________ ______________
6. ______________ ______________

**7) பொருத்தமான சொல்லை வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

| நாம் | மொழி | இனிய | பள்ளி |
|---|---|---|---|

## தாய்மொழி

எங்கள் தாய் ______________________ தமிழாகும் - அது

என்றும் ______________________ மொழியாகும்

தாய்மொழியை ______________________ படிப்போம்

தமிழ்ப் ______________________ சென்றிடுவோம்

தமிழை வீட்டில் பேசிடுவோம்

தமிழராக நாம் வாழ்ந்திடுவோம்.

# அலகு 6

**1) பொருத்தமான சொற்களை எழுதிச் சொல்லியங்களை நிறைவு செய்வோம்.**

1. நாட்டார் என்பது நாட்டுப்புற மக்களைக் ______________ .

2. உழவுத் தொழில் புரியும் போது பாடப்படும் பாட்டு ______________ .

3. தமிழீழப்பகுதி வரலாற்றுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழும் ______________ .

4. கொக்குகளும் ஆமையும் குளத்தில் வாழ்ந்து ______________ .

5. சங்கிலி மன்னன் இறுதிவரை போர்த்துக்கேயரை எதிர்த்துப் ______________ .

**2) பின்வரும் நிரற்கூட்டை நிறைவு செய்வோம்.**

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| | பாடுகின்றான் | |
| பாய்ந்தது | | |
| | | ஆடும் |
| | செல்கின்றான் | |

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :** கண்பார்த்தால் ________________ செய்யும்.

2. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை

   யிகல்வெல்லல் ________________ மரிது

3. யாரை வெல்வது கடினம் என வள்ளுவர் கூறுகின்றார்?

________________________________________

________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| நல்லுடலும் | பாலுந்தேனும் | அவர்கள் |
| வேடர்களும் | விண்ணுந்துகளை | தொழில்கள் |

### பழங்குடிமக்கள்

பழங்குடிமக்கள் ஈழத்தில் இன்றும் வாழ்கின்றனர். இவர்களை வேடர் என்று சொல்வர். ஈழத்தில் வில்பத்துக் காடுகளில் சிங்களம் பேசும் வேடர்களும் உன்னிச்சைக் காடுகளில் தமிழ்பேசும் ________________ வாழ்கின்றனர். சிறுபயிர்ச் செய்கை, வேட்டையாடுதல், தேன் எடுத்தல், சிறிதளவு மந்தை வளர்ப்பு இவர்களது ________________. இயற்கையுணவு, குறைந்தளவு ஆடை, மழை குளிரின் காப்புக்கு ஒரு சிறுவீடு, நோய்ப்பிணிக்கு மூலிகை மருந்துகள்; ________________ மிகுந்த சத்துணவாக இருப்பதால் அவர்களது உடலில் சோர்வில்லை. நகர்ப்புறத்து உற்பத்திகள் அவர்களைச் சென்றடையாததால் தேவையற்ற நோய்களில்லை. அதனால், இயற்கைவாழ்வில் அவர்கள் திடகாத்திரமும் ________________ உடையவர்களாக உள்ளனர். நகர்ப்புற வணிகர்கள்

இவர்களிடம் காடுபடு பொருட்களைப் பண்டமாற்றுச் செய்ய வருவதால், இவர்கள் நகர்ப்புற நாகரிகத்தையும் அறிவர். விண்ணில் பறக்கும் ________________________ க் காண்பதால் உலக வளர்ச்சியையும் தெரிந்து வைத்திருக்கின்றனர். ஆனால், இந்த வளர்ச்சியில் தாங்களும் பங்குகொள்ள ________________________ விரும்புவது இல்லை. அவர்களது தேவைகள் இயற்கையிலேயே கிடைப்பதால் இன்ப வாழ்வு வாழ்கின்றனர்.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## கடற்றொழில்

பழங்காலத்திலிருந்தே கடற்றொழில் மக்களின் அகத்தியமான தொழிலாக விளங்கி வருகின்றது. நமது நாட்டிலுள்ள அடிப்படைத் தொழில்களில் கடற்றொழிலும் ஒன்று. மாந்தனின் உணவுத் தேவையில் கடற்தொழிலும் பெரும்பங்கு வகிக்கின்றது. பிறதுறைகளைப் போல கடற்றொழில் துறையும் வளர்ச்சியடைந்து வருகின்றது. மீன்கள் நிறைந்திருக்கும் இடங்களைக் கருவிகள் மூலம் கண்டறிந்து பெருமளவு மீன்கள் பிடிக்கக் கூடிய வாய்ப்புகள் இன்று ஏற்பட்டுள்ளன.

கடற்றொழில்கள் சிறப்பாக நடை பெறுவதற்காக கடற்றொழிலாளர்களின் நலங்கருதி பாதுகாப்புச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பெருமளவு கிடைக்கின்ற மீன்களை உடனுக்குடன் கப்பலிலே வைத்து தகரத்தில் அடைக்கும் அளவிற்கு கடற்றொழிற்துறை இன்று மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அதிக வருமானந் தருந் தொழிலாகவும் பெருமளவு வேலைவாய்ப்பைப் பெற்றுத் தரும் தொழிலாகவும் இது உள்ளது. கடலேரிகளில் பிடிக்கப்படும் இறால், நண்டு என்பனவும் கடலில் பிடிக்கப்படும் கணவாய், கடல் அட்டை என்பனவும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

1. பழங்காலத்திலிருந்தே மக்களின் அகத்தியமான தொழிலாக விளங்கிவருவது எது?

______________________________

______________________________

2. மீன்கள் நிறைந்திருக்கும் இடங்கள் எவ்வாறு கண்டறியப்படுகின்றது?

______________________________

______________________________

3. கடற்றொழிலாளர்களின் நலங்கருதி எச்சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன?

______________________________

______________________________

4. அதிக வருமானந்தரும் தொழிலாகக் காணப்படுவது எது?

______________________________

______________________________

5. ஏற்றுமதி செய்யும் கடலுணவுகள் எவை?

______________________________

______________________________

**6) பொருத்தமான விடைகளைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுவோம்.**

1) போர்த்துக்கேயர் வருகையின்போது தமிழீழப் பகுதியில் நிலவிய அரசு

அ) யாழ்ப்பாணத்தமிழரசு　　ஆ) கண்டியரசு

இ) கோட்டையரசு　　ஈ) கரையோரச்சிங்கள அரசு

2) குணப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) காலை　　ஆ) நூல்　　இ) வட்டம்　　ஈ) நாள்

3) போர்த்துக்கேயர் இலங்கையை வந்தடைந்த நூற்றாண்டு

அ) 14ஆம் நூற்றாண்டு　　ஆ) 15ஆம் நூற்றாண்டு

இ) 17ஆம் நூற்றாண்டு　　ஈ) 16ஆம் நூற்றாண்டு

4) தமிழீழம் என்பது

அ) சினைப்பெயர்　　ஆ) இடப்பெயர்

இ) பொருட்பெயர்　　ஈ) தொழிற்பெயர்

5) பட்டி பெருக வேணும் என்ற பாடல்

அ) தாலாட்டுப்பாட்டு　　ஆ) காதற் பாடல்

இ) ஏர்ப்பாடல்　　ஈ) அறுவடைப்பாடல்

6) பின்வருவனவற்றுள் காலப்பெயரைக் குறிப்பது

அ) மருத்துவமனை　　ஆ) கடற்கரை

இ) காது　　ஈ) பனிகாலம்

7) ஆயுதமேந்திய தமிமீழ விடுதலைப் போராட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1972　　ஆ) 1974　　இ) 1872　　ஈ) 1976

8) பெயர்ச்சொற்கள் எத்தனை

அ) 6 ஆ) 7 இ) 4 ஈ) 5

9) மேழி என்பது

அ) நெல் ஆ) கலப்பை இ) மாடு ஈ) வயல்

10) உழுகின்றார் என்பது

அ) எதிர்காலம் ஆ) இறந்தகாலம்

இ) நிகழ்காலம் ஈ) வருங்காலம்

## 7) 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுவோம்.

✦ நீர் ஒரு பறவையானால்

# அலகு 7

**1) கீழே தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையுமாறு சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. கரை

பெயர் : ____________________

வினை : ____________________

2. படி

பெயர் : ____________________

வினை : ____________________

3. ஓடு

பெயர் : ____________________

வினை : ____________________

4. அலை

பெயர் : ____________________

வினை : ____________________

5. மடி

பெயர் : ____________________

வினை : ____________________

**2) பொருத்தமான சொற்களை எழுதி சொல்லியங்களை நிறைவு செய்வோம்.**

1. தேசிய விநாயகம் பிள்ளை அவர்களது நினைவாக முத்திரை ______________________ .

2. நாட்டார் பாடல்கள் எல்லோருக்கும் எளிதாக விளங்கக் ______________________ .

3. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாஞ் ______________________ .

4. தமிழ் மக்களின் அமைதிவழிப் போராட்டங்கள் ஆயுதப்படைகளினால் ______________________ .

5. வைக்கோலிலிருந்து தாள் ______________________ .

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :** சென்ற இடமெல்லாம் சிறப்புக்குரியவர் யார்?

______________________________________________

______________________________________________

2. நல்லனவற்றையெல்லலாம் தமது கடமைகளாக எண்ணிச் செயற்படுபவர் யார் என வள்ளுவர் கூறுகின்றார்?

______________________________________________

______________________________________________

3. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து

______________________ மேற்கொள் பவர்க்கு

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| நள்ளிரவில் | கற்கும் | பன்மொழிப் புலவர் |
| சாம்பராகியது | கல்வியறிவிலும் | வீடொன்றில் |

## யாழ் நூலகம்

யாழ் நூலகம் தமிழ் மக்களின் கல்வி, பண்பாட்டுக் கருவூலமாக விளங்கியது. கிட்டத்தட்ட 97000 நூற்தொகுதிகளுடன் இந்நூலகம் விளங்கியது. 1933ம் ஆண்டில் கே.எம். செல்லப்பா என்பவரால் சிறிய அளவிலாக ____________________ தொடங்கப்பட்டு. பல்வேறு உலக அமைப்புகளினதும் பங்களிப்புடன் தெற்காசியாவில் உள்ள பெரிய நூலகங்களில் ஒன்றாகப் போற்றப்பட்டது. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை ____________________ மாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் உற்ற துணையாக விளங்கியது. இத்தகைய சிறப்புமிக்க நூலகம், தமிழ்மக்களினது ____________________ பண்பாட்டுச் சிறப்பிலும் பொறாமை கொண்டிருந்த இனவாதிகளுக்கு வெறுப்புக்குரியதாக மாறியது. இவ்வெறுப்பு 1981ஆம் ஆண்டு மே மாதம் 31ம் நாள். ____________________ இனவாதிகளின் கையில் தீப்பந்தங்களாக மாறியது. தமிழ்மக்களின் பேருடைமையான இந்த அறிவுக்களஞ்சியம், எரிந்து ____________________ . முப்பது ஆண்டுகளாக இந்நூலகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த, ____________________ வண.பிதா சிங்கராயர் தாவீது (டேவிட்) அடிகளார். இந் நூலகம் எரிக்கப்பட்டதைக் கேள்வியுற்று மாரடைப்பினால் உயிர்நீத்தார்.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

## அன்னை தெரேசா

அன்பின் உருவமாய் இவ்வுலகில் தோன்றியவர் அக்னசு. அல்பேனியாவில் 1910ல் பிறந்த இவர் இறைபற்றும் அன்புள்ளமும் கொண்டவராக விளங்கினார். வறுமையினாலும் நோய்பிணியினாலும் வாடிய மக்களைக் கண்டபோதெல்லாம் வாடினார். எல்லையற்ற அவரது அன்பும் எளிமையும் அவரது வாழ்க்கைப் போக்கை மாற்றியது. தனக்காக வாழாது பிறருக்காக வாழவேண்டும் என்று எண்ணிக் கிறித்துவக் கன்னியர் மடத்தில் இணைந்து கொண்டார். துன்புற்ற மக்களுக்காக அவர் ஆற்றிய பணிகளால் அன்னை தெரேசா என அழைக்கப்பட்டார். வறுமையில் வாழ்ந்த இந்தியச் சேரி மக்கள் மீது அவர் கருணை கொண்டார். தொழுநோயாளர்களைத் தொட்டும் தூக்கியும் அன்பு காட்டினார். ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்து அவர்களை நல்வழிப்படுத்தினார். ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவும் பொருட்டு பல இல்லங்களை நிறுவினார் அன்னை தெரேசா. ஆம்! அவர் கோடானு கோடி அன்னையர்க்கும் அன்னையாகி 1997ஆம் ஆண்டு இறைநிலை பெற்றார்.

1. அன்னை தெரேசாவின் இயற் பெயரென்ன?

______________________________________________

______________________________________________

2. அவரது எத்தகைய பண்பு அவரின் வாழ்க்கைப் போக்கை மாற்றியது?

______________________________________________

______________________________________________

3. எத்தகைய மக்கள் மீது அவர் கருணை கொண்டார்?

______________________________________________

______________________________________________

4. ஆதரவற்ற குழந்தைகளுக்காக அன்னை தெரேசா எவற்றை நிறுவினார்?

________________________________________

________________________________________

5. அவர் எந்த ஆண்டில் இறைநிலை அடைந்தார்?

________________________________________

________________________________________

**6) பின்வருஞ் வினைச் சொற்களின் இடைநிலைகளைக் கண்டறிந்து எழுதுவோம்.**

1. வென்றான் :- ______________________________

________________________________________

2. ஆடுகின்றாள் :- ______________________________

________________________________________

3. தேடுவான் :- ______________________________

________________________________________

4. போவான் :- ______________________________

________________________________________

5. தேடின :- ______________________________

________________________________________

6. காண்பான் :- ______________________________

________________________________________

**7) பொருத்தமான சொல்லை வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

| இனிய | பறக்கும் | வகையாய் | நல்ல | நாளும் |
|---|---|---|---|---|

## பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்

வகை ______________ நிறங்கள்

எண்ண எண்ண இனிக்கும்

இனிய ______________ பூக்கள்

வண்டு சுற்றிப் ______________ தேனை

உண்டு ______________ களிக்கும்

என்றும் ______________ மணத்தை

எங்கும் பரப்பும் பூக்கள்

# அலகு 8

**1) கீழே உள்ள சொல்லியங்களை நிகழ்கால வினைச் சொற்களை வைத்து நிறைவு செய்வோம்.**

1. பொழிலன் விளையாட்டுத் திடலுக்குச் ______________________ .
2. பறவைகள் வானத்தில் கூட்டங் கூட்டமாகப் ______________________ .
3. வன்னி மக்கள் காலங்காலமாகத் துன்பப் ______________________ .
4. உலகெங்கும் தமிழர்கள் பரந்து ______________________ .
5. உந்துகளிலிருந்து வெளியேறும் கழிவுகளினால் வளி ______________________ .

**2) பின்வருஞ் சொற்களைச் சேர்த்து எழுதுவோம்.**

1. தண்மை + நீர் = ______________________
2. தை + பொங்கல் = ______________________
3. பால் + குடம் = ______________________
4. வானம் + வில் = ______________________
5. தமிழ் + ஏடு = ______________________

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :** ______________________ தூக்கு மேடை பஞ்சுமெத்தை.
2. அழிவு நேரும் போதும் அஞ்சாதவர்கள் யாரென வள்ளுவர் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

3. யாருக்கு வன்மை எனும் நெஞ்சுரம் இருக்கும்?

_______________________________________________

_______________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| ஈமத்தாழிகள் | கதிரமலை | விசயன் |
| தமிழர்கள் | தமிழகத்தில் | தமிழ்மக்களே |

### மண்ணுரிமை

இலங்கையிலே மிகப் பழங்காலத்திலிருந்தே ______________________ வாழ்ந்து வந்தனர். இதற்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் சான்றுகள் உள்ளன. இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் அந்த இலக்கியச் சான்றுகளை உறுதி செய்கின்றன. ______________________, பூநகரி ஆகிய இடங்களில் தமிழர்களின் பண்டைய தலைநகரங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பல இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் ______________________, ஈமப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை பழங்கற்காலத்திலிருந்தே ஈழத்தில் மக்கள் வாழ்ந்துள்ளமையை உறுதிசெய்கின்றன. எனவே மாந்த நாகரிகம் உருவான காலத்திலிருந்தே ஈழத்தில் மக்கள் வாழ்கின்றனர் என்பது தெரிகின்றது. இந்த அகழ்வாய்வுகளாற் கிடைத்த பொருட்களின் ஆய்வுகளிற் பல செய்திகள் புலப்பட்டுள்ளன. ஈழத்தில் கிடைத்த புதைபொருட்களும்

____________________ கிடைத்த புதைபொருட்களும் ஒரே நாகரிகத்தை சேர்ந்தவை. இதிலிருந்து ____________________ இலங்கைக்கு வருவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஈழத்தில் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பது தெரிகிறது. எனவே ஈழமண்ணின் உரிமைக்குரியோர் ____________________ ஈழம் தமிழ் மக்களின் தாய்மண்ணே என்பதில் ஐயமில்லை.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### யாழ்ப்பாணம்

இன்று பொதுவாக யாழ்ப்பாணம் என்று அழைக்கப்படுகிற யாழ்குடாநாடு காலத்திற்குக் காலம் ஏதோ கரணியங்களால் (காரணம்) வெவ்வேறு பெயர்களைக் கொண்டிருந்தது. புத்தருடைய காலத்திற்கு முன்பு அல்லது சமகாலத்தில் சம்புகோளம் என அழைக்கப்பட்டது. சம்பு என்றால் நாவல். நாவல் மரங்கள் குடாநாட்டில் அதிகம் காணப்பட்டதால் இப்பெயர் வந்திருக்கலாம். நாவல் என்ற பெயரடியைக் கொண்ட ஊர்கள் அங்கு இன்றுமுள்ளன. புத்தரின் ஈழவருகை பற்றிய செய்திகளில் அது நாகதீபம் என்று அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அக்காலத்தில் யாழ் குடாவையும் வன்னியையும் நாகர் என்ற இனத்தார் ஆண்டதால் அப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். கி.பி 9 ஆம் நூற்றாண்டுகளில் யாழ்குடாவின் மேற்குப் பகுதி மணற்றி என்று அழைக்கப்பட்டிருக்கிறது. எங்கும் மணற்குன்றுகள் நிறைந்திருந்தமையால் அப்படி அழைத்திருக்கலாம். கி.பி 10 ஆம் நூற்றாண்டளவில் பார்வையற்ற வீரராகவன் என்ற பாணன் ஒருவன் யாழ் இசைத்து மன்னனை மகிழ்வித்தமையால் அவனுக்கு மணற்றி பரிசாக வழங்கப்பட்டது. அன்றிலிருந்து யாழ்ப்பாணம் ஆயிற்று என்பர். இப்படி யாழ்குடாநாட்டில் பல பெயர் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் ஈழத்தீவின் ஈழம் என்ற பெயர் மட்டும் அன்றிலிருந்து இன்றுவரை மாறாது இருக்கிறது. ஈழம் என்றால் பொன், தங்கம் என்றொரு பொருள் உண்டு. ஆகவே பொன் நிறைந்த நாடாக வளஞ்சிறந்த நாடாகத் தமிழீழம் முன்னாளில் விளங்கிற்று.

1. எக் கரணியத்தால் யாழ்ப்பாணம் என்ற பெயர் உருவாயிற்று?

2. புத்தருடைய காலத்தில் யாழ்குடா நாட்டின் பெயரென்ன?

3. ஈழம் என்றால் பொருள் என்ன?

4. இன்றைய யாழ்ப்பாண நகரின் முன்னைய பெயர் என்ன?

5. நாகதீபம் என்ற பெயர் உருவாகக் கரணியம் என்ன?

**6) பொருத்தமான விடைகளைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுவோம்.**

1) கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களுக்கு கவிமணி என்ற பட்டத்தை வழங்கியவர்

அ) கணபதிப்பிள்ளை ஆ) வேலுப்பிள்ளை

இ) சிவதாணுப்பிள்ளை ஈ) உமாமகேசுவரன் பிள்ளை

2) வயல் + கரை என்பதைச் சேர்த்தால்

அ) வயல்க்கரை ஆ) வயல்கரை

இ) வயற்கரை ஈ) வயற்க்கரை

3) இறந்தகாலத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பார்த்தான் ஆ) உண்கின்றான்

இ) பறக்கிறது ஈ) எழுவாள்

4) நாகதீபம் மணிபல்லவம் என்பன

அ) தென்னிலங்கை ஆ) கிழக்கிலங்கை

இ) வடஇலங்கை ஈ) மேற்கு இலங்கை

5) யாழ்ப்பாணத் தமிழரசின் கொடி

அ) விற்கொடி ஆ) நந்திக்கொடி

இ) வீணைக்கொடி ஈ) மீன்கொடி

6) மன்னார்க்கடலில் முத்துக்குளிக்கும் முழு உரிமையும் பெற்றிருந்த அரசு

அ) யாழ்ப்பாண அரசு ஆ) சிங்கள அரசு

இ) கோட்டை அரசு ஈ) கண்டியரசு

7) யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் தமிழரசு நிலவிய இடங்களில் ஒன்று

அ) கந்தரோடை | ஆ) வன்னி
இ) முல்லைத்தீவு | ஈ) கொழும்பு

8) வாழைக்காய் என்பதைப் பிரித்தால்

அ) வாழைய் + காய் | ஆ) வாழை + காய்
இ) வாழைக் + காய் | ஈ) வாழைய்க் + காய்

9) யாழ்ப்பாணத் தழிழரசின் கடைசி மன்னன்

அ) சங்கிலியன் | ஆ) பண்டாரவன்னியன்
இ) எல்லாளன் | ஈ) சேனன்

10) தேசியவிநாயகம் பிள்ளை ஆங்கில நூலைத் தழுவித் தமிழில் எழுதிய நூல்

அ) தேம்பாவாணி | ஆ) ஆசியசோதி
இ) நாலடியார் | ஈ) திருக்குறள்

**7) 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுவோம்.**

✦ தாயகம்

# அலகு 9

1) பின்வரும் கூற்றுச் சொல்லியங்களை வினாச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

1. அண்ணன் கடைக்குச் சென்றார்.

______________________________

______________________________

2. இன்று நல்ல மழை பெய்தது.

______________________________

______________________________

3. நேற்று எனது பள்ளியில் விளையாட்டுப் போட்டி நடந்தது.

______________________________

______________________________

4. மரத்திலிருந்து பழங்கள் விழுகின்றன.

______________________________

______________________________

5. கதிரவனைக் கண்டு தாமரை மலர்ந்தது.

______________________________

______________________________

**2) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுவோம்.**

1. மரங்கொத்தி = ______________________
2. கரும்பலகை = ______________________
3. ஏவுகணை = ______________________
4. மண்வீடு = ______________________
5. வயற்கரை = ______________________

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :** தனி மரம் ______________________ .
2. தன்னை வெட்ட வெட்ட நிழலைத் தருவது எது?

______________________________________________

______________________________________________

3. தமக்குத் தீங்கு செய்பவரையும் காப்பவர் யார்?

______________________________________________

______________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| விடுதலை | வான்வெளியில் | மாற்றானின் |
| குமுகாயம் | அடக்கியாள | மனிதநேயமற்ற |

விடுதலையுணர்வு

தன்வீட்டில், தன்மண்ணில், தன்மொழியைப் பேசி, தன் உழைப்பில் தன் இனத்தோடு வாழ்வதற்கு ______________________ வல்லாட்சிலிருந்து விடுபடுவதே விடுதலையுணர்வாகும் மாந்தருக்கு மட்டுமல்ல இந்த விடுபடும்

உணர்வு விலங்குகளுக்கும் உண்டு. கூண்டில் அடைபட்டிருக்கும் கிளி அதிலிருந்து விடுபட்டு ____________________ பறந்துவிடத் துடிக்கிறது. கட்டி வளர்க்கப்படும் மாடு கட்டையறுத்துக் கொண்டு தன்னிச்சைப்படி மேய முனைகிறது. இதிலிருந்து விடுதலையுணர்வு அனைத்து உயிர்களுக்கும் இருப்பதை உணரமுடிகிறது. மாந்தன் மட்டுமே தன் விடுதலையைப் பெறும் வழியைத் தெரிந்து முயல்கிறான். உலகம் முழுவதிலுமே பெரும்பான்மைக் ____________________ சிறுபான்மைக் குமுகாயத்தை ____________________ முயல்கிறது. அமைதி வழிகளால் விடுபட முயலும் குமுகாயத்தை வன்முறைகளால் அடக்குகிறது. இந்நிலையில் அடக்கப்படும் இனம் தன் வலிமையைப் பயன்படுத்தி, அடக்குமுறையை உடைத்து விடுபட முயல்கிறது. இதுவே ____________________ ப் போராட்டமாகும். இந்த விடுதலைப் போராட்டங்களின் மேன்மையை, உயிரைக் கொடுத்தும் விடுதலை பெறமுயலும் செயல்களிலிருந்து உணரலாம். இருந்தும், ____________________ அடக்குமுறையாளன் இருக்கும்வரை, விடுதலைப் போராட்டங்களும் நிகழ்ந்துகொண்டு தான் இருக்கும்.

**5) பாடலைப் படித்து வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### தமிழே உயிரே

தமிழே உயிரே வணக்கம்

தாய் பிள்ளை உறவம்மா

உனக்கும் எனக்கும்

தமிழே உயிரே.......

அமிழ்தே நீ இல்லையென்றால்

அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்

தமிழே உயிரே.......

தமிழே உன்னை நினைக்கும்

தமிழன் என்நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்

அமிழ்தே உன் எழில் நினைத்தால்

ஆயிரம் பூக்கள் சிரிக்கும் சிரிக்கும்

தமிழே உயிரே.......

தமிழே நீயே என் இயக்கம்

தாய் நீ என் வழிக்கும் நடைக்கும்

அமிழ்தே நீ தரும் இன்பம்

அடியேன் வாழ்வில் வேறெங்கேகிடைக்கும்

தமிழே உயிரே.......

தமிழே இன்றுன்னைப் பழிக்கும்

தறுக்கன் உலகில் இருக்கும்வரைக்கும்

அமிழ்தே நீ வாழும் மண்ணில்

அனலே பெருக்கும் அனலே பெருக்கும்

தமிழே உயிரே.......

தமிழே உனக்கேன் கலக்கம்

தாயே பொறம்மா முழக்கம் வெடிக்கும்

அமிழ்தே உனை எவன் தொட்டால்

அவனை என் கைவாள் அழிக்கும் முடிக்கும்

தமிழே உயிரே.......

- காசி ஆனந்தன்

1) தமிழுக்கும் தனக்கும் என்ன உறவு என்று கவிஞர் கூறுகின்றார்?

2) எது இல்லை என்றால் வாழ்வு கசக்கும் எனக் கூறப்படுகின்றது?

3) அமிழ்தே உன் எழில் நினைத்தால் எவை சிரிக்குமெனக் கவிஞர் கூறுகின்றார்?

4) இங்கு அமிழ்தே எனக் குறிப்பிடப்படுவது எது?

5) இப்பாடலை எழுதியவர் யார்?

**6) பின்வரும் வினைச் சொற்களில் திணை, பால், இடம், காலம் என்பவற்றைத் தருக.**

| | திணை | பால் | இடம் | காலம் |
|---|---|---|---|---|
| நீந்துகிறான் | | | | |
| கூவியது | | | | |
| பாய்ந்தன | | | | |
| பேசினர் | | | | |
| வரைவாள் | | | | |

**7) 100 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுவோம்.**

✦ நீர் கலந்து கொண்ட ஒரு விழா

# அலகு 10

**1) தொடர்ச்சொல்லியங்களை தனிச்சொல்லியங்களாக மாற்றி எழுதுவோம்.**

1. நான் தாயகத்துக்குச் சுற்றுலாச் சென்று மாவீரர் துயிலும் இல்லங்களைப் பார்த்தேன்.

2. குயில் மரத்தில் இருந்து இனிமையாகக் கூவியது.

3. மக்கள் போரினால் காயமடைந்து துன்பப்பட்டனர்.

4. கவிதா நன்றாகப் படித்துத் தமிழ்மொழித்தேர்வு எழுதினாள்.

5. அறிவியலாளர் விண்வெளிக்குச் சென்று ஆராய்ச்சி நடத்தினர்.

**2) பொருத்தமாக இணைப்போம்.**

| | |
|---|---|
| 1. காலம் | உயிர்திணை, அஃறிணை |
| 2. எண் | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| 3. மூவிடம் | ஒருமை, பன்மை |
| 4. ஐம்பால் | இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| 5. திணை | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :** யாருக்குக் குறைவில்லை?

_______________________________________________

_______________________________________________

2. உறவினரிடம் காட்டும் அன்பானது ஒருவனுக்கு யாரிடம் விருப்பத்தை உண்டாக்கும் என வள்ளுவர் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

3. எது நட்பு என்னும் சிறப்பைப் பெற்றுத் தரும் என வள்ளுவர் கூறுகின்றார்?

_______________________________________________

_______________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| மலர்கள் | கூடுகளை | சிறுவர்கள் |
| மாந்தர் | கதிரவன் | அழகாக |

**மாலைக்காட்சி**

அழகொழிக்கும் மாலைக்காட்சி மனதிற்கு இன்பம் தரும் ஒரு இயற்கைக்காட்சியாகும். பரந்து விரிந்த தனது ஒளிக்கதிர்களைச் சுருக்கிக்கொண்டு ________________ மறையத்தொடங்கும். அவ்வேளை கதிரவன் தங்கத்தகடுபோல் பளபள என மின்னும். அடிவானம் செக்கச்சிவந்து ________________ க் காட்சியளிக்கும். இருள் எங்கும் மெல்லமெல்லப் பரவத்தொடங்கும். தாமரை மலர்கள் கூம்ப அல்லி ________________ இதழ் விரிக்கும். முல்லை மலர்கள் போல் வானத்தில் விண்மீன்கள் கண்சிமிட்டிச் சிரிக்கும். பறவைகள் தத்தம் ________________ நோக்கித் திரும்பும். ஆநிரையும் ஆடுகளும் தொழுவங்களை நோக்கி விரையும். விளையாடிக்களித்த ________________ வீடு நோக்கிச் செல்வர். மாலை மலரும் மல்லிகையும் முல்லையும் எங்கும் இனிய மணத்தை பரப்பத் தொடங்கும். பகல் முழுவதும் உழைத்துக் களைத்த ________________ ஓய்வெடுக்கும் இரவை நோக்கி மாலைப் பொழுது மெல்லமெல்ல நகர்ந்து செல்லும். தோழர்களுடன் விளையாடிக்களித்த நானும் இம்மாலைக்காட்சியைப் பார்த்து மகிழ்ந்தவாறே எனது வீட்டுக்குத் திரும்புகிறேன்.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

**நட்பு**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் சேர சோழ பாண்டியர் தமிழ்நாட்டை ஆட்சி செய்தனர். அவர்களை விட பல குறுநில மன்னர்களும் தமிழ்நாட்டின் அரசர்களாக விளங்கினர். அவர்களுள் பாரி என்னும் மன்னன் சிறந்த வீரனாகவும் உயிர்களிடத்தில் இரக்கம் உடையவனாகவும் விளங்கினான். பாரி

பறம்பு நாட்டை ஆண்டான். அந்நாட்டில் முந்நூறு ஊர்களும் பறம்புமலையும் இருந்தன. அவற்றில் முந்நூறு ஊர்களையும் வறிய மக்களுக்குப் பரிசாக வழங்கினான். அவனுக்கு இரு பெண்பிள்ளைகள். அக்காலத்தில் கபிலர் என்ற புலவர் புகழுடன் விளங்கினார். அவர் பாரியுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். ஒரு நாள் காட்டு வழியால் சென்று கொண்டிருந்த போது ஒரு முல்லைக் கொடி நிலத்தில் கிடந்தது. இதைக் கண்ட பாரி இரக்கம் கொண்டான். தான் ஏறிவந்த தேரை நிறுத்தி முல்லைக் கொடியைப் அதன் மேல் படரவிட்டான். இக்கொடைச் சிறப்பினால் பாரியின் புகழ் தமிழ்நாடு எங்கும் பரவியது. இதனால் பெறாமை கொண்ட மூவேந்தரும் பாரியைக் கொன்றனர். தந்தையை இழந்த பாரிமகளிரை கபிலர் காப்பாற்றினார். அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கப் பல முயற்சிகள் எடுத்தார். ஆனால் மூவேந்தருக்கும் பயந்த பல மன்னர்கள் பாரிமகளினரைத் திருமணஞ் செய்ய மறுத்து விட்டனர். இதனால் மனம் நொந்த கபிலர் பாரிமகளினரை ஓர் அந்தணரிடம் ஒப்படைத்து விட்டு வடக்கிருந்து உயிர் நீத்தார். கபிலர் பாரி மீது கொண்டிருந்த நட்பின் சிறப்பை இதிலிருந்து அறியலாம்.

1. பாரி எந்த நாட்டை ஆண்டான்?

______________________________

2. பாரி முந்நூறு ஊர்களையும் யாருக்குப் பரிசாக வழங்கினான்?

______________________________

3. பாரி எதன் மேல் முல்லைக்கொடியைப் படர விட்டான்?

______________________________

4. யார் பாரியைக் கொன்றனர்?

______________________________

5. கபிலர் யாரிடம் பாரிமகளினரை ஒப்படைத்தார்?

______________________________

**6) பொருத்தமான விடைகளைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுவோம்.**

1. மழையில் நனைந்தபடி பாரிமகளிர் வீட்டிற்கு வந்த புலவர்

அ) கபிலர் ஆ) பேகன் இ) காரி ஈ) ஔவையார்

2) கால்கை பிடித்தல் என்றால்

அ) மன்னிப்புக் கேட்டல் ஆ) உதவி கேட்டல்

இ) மன்றாடுதல் ஈ) கால் கை வருடுதல்

3) காசி ஆனந்தன் ஓர் உணர்ச்சிக் கவிஞர். இச்சொல்லியம்

அ) கூற்று ஆ) வினா இ) வியப்பு ஈ) ஏவல்

4) பாரிமன்னன் ஆட்சி செய்த இடம்

அ) சேர நாடு ஆ) சோழ நாடு

இ) பறம்பு மலை ஈ) முதிரை மலை

5) மன்னர் தொட்டு வளர்த்தது எனக் கவிஞர் காசி ஆனந்தன் கூறுவது

அ) தமிழ் மக்களை ஆ) வெட்டிமனிதரை

இ) மக்களை ஈ) புலவரை

6) ஓர் எழுவாயின் முற்றுப்பெற்ற ஒரே ஒரு செயலை மட்டும் கூறும் சொல்லியம்

அ) கூட்டுச் சொல்லியம் ஆ) கலப்புச்சொல்லியம்

இ) தனிச்சொல்லியம் ஈ) வியப்புச்சொல்லியம்

7) உலகமக்கள் அனைவருக்கும் தாயாக விளங்கியவர்

அ) ஔவையார் ஆ) தெரேசா

இ) பூபதி ஈ) நைற்றிங்கேல்

8) நுடங்கி என்பதன் பொருள்

அ) நிலை தளர்ந்து ஆ) நிமிர்ந்து

இ) மெலிந்து ஈ) அசைந்து

9) ஓடின என்பது

அ) ஒன்றன்பால் ஆ) பலர்பால்

இ) பலவின்பால் ஈ) ஆண்பால்

10) முல்லைக்குத் தேர் கொடுத்த வள்ளல்

அ) பேகன் ஆ) காரி இ) ஓரி ஈ) பாரி

**7) கீழ்வரும் தலைப்பில் நான்கு வரிகளில் கவிதை எழுதுவோம்.**

✦ அம்மா

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

# அலகு 11

**1) பின்வரும் தனிச்சொல்லியங்களைத் தொடர்ச்சொல்லியங்களாக மாற்றுவோம்.**

1. சங்கிலியன் போர்த்துக்கேயரை எதிர்த்தான்.
   சங்கிலியன் போரிட்டான்.

   ______________________________

   ______________________________

2. தம்பி போட்டியில் பங்குபற்றினான்.
   தம்பி பரிசு பெற்றான்.

   ______________________________

   ______________________________

3. தமிழினி பூங்காவில் மலர்களைக் கொய்தாள்.
   தமிழினி அழகான மாலை தொடுத்தாள்.

   ______________________________

   ______________________________

4. கிளி மரத்தில் இருந்தது.
   கிளி பழத்தைக் கொத்தியது.

   ______________________________

   ______________________________

5. தமிழர் தைப்பொங்கலைக் கொண்டாடுவர்.

தமிழர் ஆடிப்பிறப்பைக் கொண்டாடுவர்.

____________________________________________

____________________________________________

## 2) கீழே உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுவோம்.

1. மலர் + கொய்தாள் = ____________________
2. தமிழ் + கவிஞர் = ____________________
3. தமிழ் + இசை = ____________________
4. ஓர் + இலை = ____________________
5. ஆண்டு + ஆண்டு = ____________________

## 3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. பழமொழி :

   அடிமேல் அடி அடித்தால் ____________________ நகரும்.

2. யாரால் எடுத்த செயல்களை வெற்றிகரமாகச் செய்ய முடியும் என மூதுரையில் கூறப்பட்டுள்ளது?

   ____________________________________________

   ____________________________________________

3. அரிசியின் மீது தோல் போல் மூடியிருப்பது எது?

   ____________________________________________

   ____________________________________________

**4) தரப்பட்டுள்ள சொற்களில் பொருத்தமான சொல்லை, கீறிட்ட இடங்களில் எழுதி நிறைவு செய்வோம்.**

| | | |
|---|---|---|
| மகிழ்ச்சியாக | பிரம்புடன் | ஊக்கத்தினாலும் |
| ஆற்றை | வாழ்க்கையை | |

முயற்சி

ஓர் ஊரில் கண்பார்வையற்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் கண்பார்வையில்லா விட்டாலும் சோர்ந்திருப்பதில்லை. வெள்ளைப் ____________________ எங்கும் சென்று தனது வேலைகளைச் செய்வான். அத்துடன் மிகவும் சிறப்பாகப் பாடல்களைப்பாடுவான். இவனது பாடல்களைப் பலரும் கேட்டு மகிழ்வர். அவர்கள் கொடுக்கும் பணத்தைக் கொண்டே தனது ____________________ நடாத்தி வந்தான். ஒரு நாள் இவன் ஆற்றைக் கடப்பதற்காக நின்றான். யாராவது தனக்கு உதவ வருவார்கள் என்று காத்திருந்தான். அதே நேரம் நடக்க இயலாத ஒருவனும் ____________________க் கடப்பதற்காகக் காத்திருந்தான். கண்பார்வை அற்றவனைக் கண்டதும் அண்ணா உங்களுக்குக் கண் தெரியாது எனக்கோ கால் இல்லை என்னைத் தூக்கி உங்கள் தோளில் வைத்தால் நாங்கள் இருவரும் இலகுவாக இந்த ஆற்றைக் கடந்து விடலாம் என்றான். இதைக்கேட்டு மகிழ்ந்த கண் தெரியாதவன் கால் இல்லாதவனைத் தூக்கித் தன் தோளின் மேல் வைத்தான். இருவரும் கரைக்கு வந்தனர். அப்பொழுது தம்பி உனது கண்களும் எனது காலும் சேர்ந்தால் நாம் எக்குறையுமின்றி ____________________ வாழலாம் என்று கண் தெரியாதவன் கூறினான். கண்தெரியாதவன் நன்றாகப் பாடி மக்களை மகிழ்வித்தான். கால் இல்லாதவன் மக்கள் விரும்பிக் கொடுத்த பணத்தைச் சேகரித்தான். அண்ணா நாம் இனி இருவர் அல்ல ஒருவர் என்றான் கால் இல்லாதவன். ஆமாம் தம்பி என் கால்களுக்கு உண் கண்கள் ஒளி உன் உடலுக்கு என் கால்கள் வழிகாட்டி என்று மகிழ்ச்சியோடு கூறினோன். இருவரும் விடாமுயற்சியினாலும் ____________________ சிறப்பாக வாழ்வதைக் கண்டு எல்லோரும் பாராட்டினர்.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

### கால்டுவெல் (1815-1890)

கால்டுவெல் இருபத்திமூன்றாம் அகவையில் கிறித்துவத் தமிழ்ப்பள்ளியில் கற்பதற்காகத் தமிழகம் வந்தார். திருநெல்வேலிமாவட்டம் இடையன் குடியில் வாழ்ந்தார். இவர் இலத்தீன், கிரேக்கம், எபிரேயம், யேர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மேலை நாட்டு மொழிகளிலும் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற திராவிட மொழிகளிலும் புலமை பெற்றார். திராவிட மொழிகளும் வட இந்திய ஆரிய மொழிகளும் முற்றிலும் வேறுபட்டவை. அவை வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் என்றும் நிலை நாட்டினார். இவர் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆங்கில நூல் திராவிட மொழியியலின் தந்தை என்ற சிறப்பினை இவருக்கு வழங்கியது. இவரது இந்த ஆய்வு நூல் பிற்காலத் திராவிட மொழியின் ஆய்வுக்கு வித்தாக விளங்கியது. இவரின் சிறப்பைப் பாராட்டி சென்னைப்பல்கலைக்கழகமும் ரோயல் ஆசியக் கழகமும் இலக்கிய வேந்தர், வேத விற்பன்னர் என்னும் பட்டங்களை வழங்கின. கால்டுவெல் நற்கருணை, தியானமாலை, தாமரைத்தடாகம் போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார்.

1) கால்டுவெல் எங்கே வாழ்ந்தார்?

________________________________________

2. இவர் புலமை பெற்றிருந்த திராவிட மொழிகள் எவை?

________________________________________

3. திராவிட மொழியியலின் தந்தை என்ற சிறப்பினை இவருக்கு வழங்கிய நூல் எது?

________________________________________

4. சென்னைப்பல்கலைக்கழகமும், ரோயல் ஆசியக் கழகமும் இவருக்கு வழங்கிய பட்டங்கள் எவை?

________________________________________

________________________________________

5. கால்டுவெல் எழுதிய நூல்கள் இரண்டினைத் தருக?

________________________________________

________________________________________

**6) எதிர்ச்சொற்களை எழுதுவோம்.**

| | |
|---|---|
| இயற்கை ____________ | எழுச்சி ____________ |
| நட்பு ____________ | இலகு ____________ |
| இருள் ____________ | தொடக்கம் ____________ |
| வீரன் ____________ | செழிப்பு ____________ |
| வெற்றி ____________ | சூடு ____________ |

**7) நண்பனுக்கு ஓர் அஞ்சல் எழுதுவோம்.**

# அலகு 12

**1) பின்வரும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியங்கள் எழுதுவோம்.**

1. பெருமை : -

2. ஏற்றுமதி : -

3. அகழ்வாய்வு : -

4. மழை : -

5. ஊக்கம் : -

**2) நிரற்கூட்டைப் பொருத்தமாக நிறைவு செய்வோம்.**

| | திணை | பால் | எண் | இடம் |
|---|---|---|---|---|
| எழுதுவான் | | | | |
| ஆடுகின்றனர் | | | | |
| கண்டாள் | | | | |
| தாவுகின்றது | | | | |
| உண்கின்றன | | | | |

**3) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. **பழமொழி :** காரத்தில் பெரியது எது?

______________________________

______________________________

2. யார் மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார்?

______________________________

______________________________

3. மெய் என்ற சொல்லின் பொருள் யாது?

______________________________

______________________________

**4) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

| | | |
|---|---|---|
| போத்தல்களிலும் | சூழல் | வாழும் |
| மழை நீர் | புகையும் | நுண்ணுயிரிகள் |

## சூழல் மாசடைதல்

அறிவியலும் தொழில்நுட்பமும் பெருமளவு வளர்ச்சியடைந்த காலத்தில் இருக்கின்றோம். ஆனாலும் இந்த அறிவியல் வளர்ச்சியின் மூலம் எங்களைச் சுற்றியுள்ள ________________ பெருமளவு பாதிப்படைந்து வருவதை நாம் உணராதவர்களாக இருக்கின்றோம். அறிவியல் வளர்ச்சியினால் பெருமளவு ஆலைகள் (தொழிற்சாலைகள்) உருவாகிவருகின்றன. அவற்றிலிருந்து வெளியேறும் இரைச்சலும் ________________ சூழலைப் பெரிதும் மாசுபடுத்துகின்றன. இவை மட்டும் அல்லாமல் இவ்வாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகள் ஆறுகளிலும் ஏரிகளிலும் கலக்கின்றன. இதனால் நீர் பெரிதும் அழுக்கடைகின்றது. அறிவியல் வளர்ச்சியின் கரணியமாகப் பெருமளவு உணவுப்பொருட்கள் இன்று தகரங்களிலும் ________________ அடைக்கப்பட்டு வருகின்றன. உணவுப்பொருட்களைப் பாவித்த பின் இப்பொருட்களை வெளியே வீசுவதன் மூலம் அவற்றிலே ________________ தேங்கியிருந்து நுண்ணுயிரிகள் உருவாகின்றன. அத்துடன் கண்ட இடங்களில் எச்சில் உமிழ்வதனால் அதிலிருந்து ________________ பெருகுகின்றன. இதனால் நாம் ________________ சூழலை நாமே மாசுபடுத்துகின்றோம். எனவே சூழலைப் பாதுகாப்பது எமது கைகளிலே தான் தங்கியுள்ளது. நாம் வாழும் சூழலைக் காப்போம் நலமாக வாழ்வோம்.

**5) பந்தியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு முழுவிடை எழுதுவோம்.**

### எடிசன்

அமெரிக்காவில் உள் நிலான் நகரில் 11. 26. 1847ஆம் ஆண்டு எடிசன் பிறந்தார். இவரது கல்விக்குத் தாயாரே பெரிதும் உதவி புரிந்தார். ஏழைக்குடும்பத்தில் பிறந்த இவர் சிறுவயதிலேயே தன் குடும்பத்திற்காக உழைக்கத் தொடங்கினார். தொடருந்து நிலையங்களிலும் தொடருந்துகளிலும் நாளிதழ்களை விற்றுப் பணம் பெற்றார். ஓய்வு நேரத்தில் படிப்பிலும் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டார். ஊக்கமும் விடாமுயற்சியும் நிறைந்த எடிசன் தனது பதினைந்தாவது அகவையிலேயே நாளிதழை வெளியிடத் தொடங்கினார். பதினாறு அகவையில் தொடருந்து நிலையத்திலேயே வேலை செய்தார். எந்நேரமும் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டுக்கொண்டிருந்தார். அதன் கரணியமாக மின்குமிழைக் கண்டு பிடித்தார். 4.9.1882ல் நியூயோக் நகரம் மின் ஒளியில் ஆழ்ந்தது. எடிசன் புகழ் உலகெங்கும் பரவியது. தோமசு அல்வா எடிசன் இல்லை என்றால் உலகமே இருளில் மூழ்கியிருக்கும். இதை விளக்கவே அமெரிக்காவில் எடிசனின் நினைவு நாளில் இரு மணித்துளிகள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு நாடு முழுவதும் இருளில் மூழ்கியிருக்கும் என்று கூறப்படுகின்றது. 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கு எடிசன் ஓர் எடுத்துக்காட்டு.

1) எடிசன் எந்த நாட்டில் பிறந்தார்?

______________________________________________

2. ஓய்வு நேரங்களில் எடிசன் என்ன செய்வார்?

______________________________________________

______________________________________________

3. மின்குமிழ் எப்பொழுது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

________________________________________

________________________________________

4. எடிசன் இல்லை என்றால் உலகம் எதில் மூழ்கியிருக்கும்?

________________________________________

________________________________________

5. இங்குவந்துள்ள பழமொழி எது?

________________________________________

________________________________________

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

வளர் தமிழ் 12
பாடநூல்

வளர் தமிழ் 11
பாடநூல்

வளர் தமிழ் 10
பாடநூல்

வளர் தமிழ் 9
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 8
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 7
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 6
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 5
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 4
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 3
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 2
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் 1
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் பாலர் நிலை
பாடநூல் | எழுதுதல்

வளர் தமிழ் மழலையர் நிலை
பாடநூல் | எழுதுதல்